அப்படி அவை பெறப்பட்டிருக்கும் என்று சொன்னால், வரக்கூடிய கல்வியாண்டிலே தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளிலே ஒன்றாக அந்தப் பள்ளியையும் பரிசீலனை செய்வதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

138—

சொந்தக் கட்டடம்

***842—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் நகரில் இரு வணிக வரி அலுவலகங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ராஜபாளையத்தில் வணிக வரித் துறைக்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான அரசுக்குரிய இடம் தெரிவு செய்யும்பொருட்டு, சிவகாசி, வணிக வரித் துறை உதவி ஆணையர் அவர்களுக்கு வணிக வரி ஆணையரால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சிவகாசி. உதவி ஆணையர் (வணிக வரி) மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் அறிக்கை பெறப்பட்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராஜபாளையம் நகரில் வணிக வரித் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருவதால், மிகவும் விரைவில் இடம் பார்க்கவும், அப்படி இடம் தேவையென்று சொன்னால், தாலுகா அலுவலகம் அருகிலும் இடம் இருக்கிறது; அதேபோல, ஜவஹர்லால் மைதானம் அருகிலும் இடம் இருக்கிறது. அதில் விரைவில் கட்டித் தரும்படி அரசை வலியுறுத்துகிறேன்.

2006 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; விரைவில் அதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வணிக வரித் துறை, நம்முடைய அரசினுடைய வருமானத்தின் பெரும் பங்கை ஈட்டிக் கொடுக்கிற துறையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே பார்க்கிறபோது, பெரும்பாலான வணிக வரித் துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இன்றைக்கு அரசுக் கட்டடங்கள் 69–ல் 220 அலுவலகங்கள் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன. அதேபோல தனியார் கட்டடங்கள் 186–ல் 267 அலுவலகங்கள் செயல்படுகின்றன. விரைவிலே ஒவ்வொன்றாக அவற்றை அரசுக் கட்டடங்களில் மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

139—

தார்ச் சாலை

***1361—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய வனப் பகுதி காவலூரில் இருந்து மந்தாரக்குட்டை வரையில் உள்ள வனச் சாலையைப் புதுப்பித்து, தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?